(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 2.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

**2024 ஒக்தோபர் 08, செவ்வாய்க்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து**
**2024 செப்தெம்பர் 06, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது**

## 2024 ஒக்தோபர் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

362/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையானது இலங்கையில் பதவிவகித்த ஒவ்வொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கும் ஏற்ப தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையானது, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், கல்வி, தேர்தல்கள் மறுசீரமைப்பு மற்றும் ஊழல்களை வெளிகொணர்தல் ஆகிய ஒவ்வொரு விடயத் துறையின் படியும் ஒவ்வொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு அமைவாகவும் தனித்தனியே எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு ஆணைக்குழு அறிக்கைகளின் படி வெளிக்கொணரப்பட்ட குற்றவாளிகள் மற்றும் அவர்களுக்கு வழங்குவதற்காக விதப்புரை செய்யப்பட்டுள்ள தண்டனைகள் ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவுக்குமாக செலவிப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கைகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பெறக்கூடியதாக உள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரை இறுதி அறிக்கையொன்றை வெளியிடாத ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்ட காலப்பகுதி மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் தனித்தனியே யாவர் என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

370/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிலும் அதன் கீழுள்ள நிறுவனங்களிலும் பணியாற்றிய அமய, பதிலீட்டு, ஒப்பந்த மற்றும் தற்காலிக ஊழியர்கள் 2019 ஆம் ஆண்டின் பின்னர் நீக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறு நீக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) அவர்கள் நீக்கப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நீக்கப்பட்டுள்ள மேற்படி ஊழியர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுவார்களா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஊழியர்கள் தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

375/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தாய்லாந்தில் சிகிச்சை பெற்றுவரும் முத்துராஜா யானை இலங்கையில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

(iii) முத்துராஜா யானையை மீண்டும் இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் பழக்கப்பட்ட யானைகள் 2022 ஆம் ஆண்டில் துன்புறுத்தல் களுக்கு உள்ளாக்கப்பட்டமை தொடர்பில் பதிவாகியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

382/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாகனப் புகை பரீட்சித்தல் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதியம் தாபிக்கப்பட்டதன் நோக்கங்கள் / குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிதியத்தின் அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(iv) புகை வெளியேற்றல் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்களினால் மேற்கூறப்பட்ட நிதியத்திற்கு மாதாந்தம் வழங்கப்படவேண்டிய தொகை சதவீத அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

(v) அதற்கமைய ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து இன்று வரை மேற்படி நிறுவனங்களிலிருந்து மேற்கூறப்பட்ட நிதியத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ள தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைவாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட நிதியம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் / குறிக்கோள்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதன் பொருட்டு நீண்டகால கூட்டுத்திட்டமொன்று அல்லது வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் நிதியத்தின் பொறுப்பாளர் சபையால் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி திட்டங்களுக்கமைவாக நிதியத்தினால் இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு ஆண்டிற்கமைவாகவும் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

467/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கான பிளாஸ்டிக் கழிவு இறக்குமதியை தடை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி யாது;

(ii) 2018 ஆம் ஆண்டு முதல் இதுவரை இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) மத்திய சுற்றாடல் அதிகாரசபை, பிளாஸ்டிக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்காக அனுமதி வழங்கியுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அவற்றின் பெயர்கள் யாவை;

(v) பிளாஸ்டிக் கழிவு இறக்குமதியை தடை செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கையில், மத்திய சுற்றாடல் அதிகாரசபை ஒருசில நிறுவனங்களுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் யாவை;

(vi) இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

513/2024

கௌரவ ரோஹண பண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹகனதராவ திட்டத்தின் கீழ் தற்போது பயிரிடப்படுகின்ற நெற் செய்கை காணிகளின் அளவு எவ்வளவு;

(ii) மேற்படி திட்டத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) மஹகனதராவ திட்டத்தின் கீழ் நெற் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளை நீர்ப்பாசன அலுவலர்கள் அச்சுறுத்தியுள்ளனர் என்பதை அறிவாரா;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

544/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை இலங்கை போக்குவரத்துச் சபையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளான ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணைகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அந்த விசாரணைகளின் பிரகாரம் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) நிவாரணங்கள் வழங்கப்படாத ஊழியர்களுக்கு எதிர்காலத்தில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) நிவாரணங்கள் வழங்கப்படமாட்டாதெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

564/2024

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நடுவதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) அவை வழங்கப்பட்ட பிரசேதங்கள் மற்றும் கன்றுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி தென்னங் கன்றுகள் உரியவாறு வளர்ச்சியடைகின்றனவா என பின்னாய்வு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி தென்னங் கன்றுகளுக்கு மத்தியில் சரியாக வளர்ந்து வரும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(v) எதிர்வரும் ஆண்டில் விநியோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் தென்னங் கன்றுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

592/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஓய்வூதியம் பெற்ற மற்றும் இன்றளவில் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அவ் ஒவ்வொரு உறுப்பினரின் ஓய்வூதியத் தொகையும் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி உறுப்பினர்களில் மக்கள் விடுதலை முன்னணியை பிரதிநிதித்துவப் படுத்திய உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவ் ஒவ்வொரு உறுப்பினரினதும் ஓய்வூதியத் தொகை மற்றும் சேவைக்காலம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) ஓய்வூதிய உரித்தை பெறுவதற்கு பாராளுமன்ற உறுப்பினரொருவர் பூர்த்தி செய்ய வேண்டிய சேவைக்காலம் யாதென்பதையும்;

(iv) 5 ஆண்டு சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினரொருவருக்கு உரித்தாகும் ஓய்வூதியத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) பாராளுமன்ற உறுப்பினரொருவரின் ஓய்வூதியம், சேவைக்காலத்தின் அடிப்படையில் எவ்வாறு மாற்றமடைகின்றதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1245/2024

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ஒரு இலட்சம் வேலைவாய்ப்புகளை வழங்கும் வேலைதிட்டத்தின் கீழ் முதலாம் கட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்பெறுநர்களின் எண்ணிக்கை, இரண்டாம் கட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்பெறுநர்களின் எண்ணிக்கை மற்றும் இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்பெறுநர்களில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்பெறுநர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்பெறுநர்களுக்காக நிரந்தர பணியிடம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) நிரந்தர பணியிடம் வழங்கப்படாத தொழில்பெறுநர்கள் இருப்பின், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழில்பெறுநர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பால்நிலைசார் சமத்துவம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

மத்தியஸ்த சபைகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

நிகழ்நிலைக் காப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பகிரங்க சொத்துக்கள் முகாமை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நாணய மாற்றுண்டியல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

தேசிய காணி ஆணைக்குழு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

கம்பனிகள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 241 - நிகழ்ச்சித்திட்டம் 01 — † 2024 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2024 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதி ஆண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறேதேனும் நிதி அல்லது தொகை அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் விருப்பின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்பட்ட எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் நூற்று முப்பது பில்லியன் (ரூபா 130,000,000,000) ரூபாவை விஞ்சாத மேலதிக குறைமதிப்பீட்டுத் தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும் அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | - 241 | பொது தொழில்முயற்சிகள் திணைக்களம் | |
| **நிகழ்ச்சித்திட்டம்** | - 01 | தொழிற்பாட்டு செயற்பாடுகள் | |
| | | மீண்டெழும் செலவினம் | ரூ. 130,000,000,000 |
| | | **மொத்தச் செலவினம்** | **ரூ. 130,000,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2024 செப்தெம்பர் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 8,750,000,000 ஆகும்.

*21.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 3),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 51 ஆம் பிரிவின் கீழ் மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 24 ஆம் திகதிய 2368/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— வெளிநாட்டு படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம்,— 2022 மார்ச் மாதத்தில், அந்நிய செலாவணி ஒதுக்கங்கள் தொடர்ச்சியான வீழ்ச்சியை கண்டிருந்தமையால், இலங்கை கடுமையான நிலையான படுகடன் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தமையாலும் இதன் விளைவாக, இலங்கை நாணயச் சபையின் ஆலோசனையின் பேரில், பொருளாதார நிலைமை மேலும் மோசமடைவதைத் தடுப்பதற்காக இலங்கை வெளிநாட்டு பொதுப்படுகடன் மீள் கொடுப்பனவுகளை இடைநிறுத்தியிருந்தமையினாலும்;

இந்த கடுமையான பிரச்சினை பற்றி பொதுமக்களுக்கு வெளிப்படையாக வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF ) கடனை மறுசீரமைப்பதற்கும், நெருக்கடிக்கு தீர்வைவொன்றைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தமையினால் அக்கறை தாரர்களின் ஆலோசனையின் பேரில், இலங்கை அரசாங்கம், சர்வதேச நாணய நிதியத்துடனான (IMF) பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நிதி ஆலோசகர் லஸார்ட் (Lazard) மற்றும் சட்ட ஆலோசகர் க்ளிஃபர்ட் சான்ஸ் எல்எல்பீ (Clifford Chance LLP) ஆகியோர்களை நியமித்திருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியமானது (IMF), இலங்கையின் நிதியியல் நிலைமை பற்றிய விரிவான மீளாய்வொன்றை மேற்கொண்டிருந்ததுடன், சவால்கள் மற்றும் சாத்தியமான தீர்வுகளை வரையறுத்து நிலையான படுகடன் பற்றிய மதிப்பீடொன்றை வெளியிட்டிருந்தமையினால் சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுக்கமைவாக, கடுமையான கடன் மறுசீரமைப்பு நடைமுறை பின்னர் இலங்கையால் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினாலும்;

இருதரப்பு கடன்வழங்குநர் மீள்கொடுப்பனவுகளையும், இறையாண்மை பிணை உரிமையாளர்களுக்கான கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியுள்ள வெளிநாட்டுக் படுகடன் திருப்பிச் செலுத்தல்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும், பலதரப்பு படுகடன் கொடுப்பனவு களைத் திருப்பிச் செலுத்துவதில் இலங்கை தொடர்ந்தும் ஈடுபட்டிருந்தமையினாலும்;

2023 யூன் 28 ஆம் திகதிய அமைச்சரவையின் தீர்மானத்தினைத் தொடர்ந்து, பொதுப்படுகடனைச் செலுத்துவதில் உறுதிப்பாட்டை நிச்சயப்படுத்துவதற்கு இலங்கையின் உள்நாட்டு படுகடன் உகந்தநிலைக்கு ஆக்கப்படுதல் வேண்டும் என்று பாராளுமன்றம் தீர்மானித்திருந்தமையினாலும்;

உள்நாட்டுப் படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையானது, சர்வதேச நாணய நிதியத்தின், நிலையான படுகடனைச் செலுத்துகின்ற மதிப்பீட்டிற்கு அமைவாக இலங்கையால் நடத்தப்பட்டு வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டமையினால், இதன் விளைவாக, வெளிநாட்டுக் கடன்களின் எஞ்சிய இரண்டு பிரிவுகள் இருதரப்பு கடன் வழங்குநர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் இறையாண்மை பிணை உரிமையாளர் களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையான படுகடன் அளபுருக்களுக்கேற்ப இருதரப்பு கடன்களை மறுசீரமைப்பதற்காக, பிரான்ஸ், யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் தலைமையின் கீழ் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவொன்று (OCC) அமைக்கப்பட்டிருந்தமையினாலும், அதேவேளை, இலங்கையானது சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கியுடன் (EXIM Bank) உத்தியோகபூர்வக் கடன் வழங்குநர் குழுவாக அதே அளபுருக்களுக்குள் கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தமையினாலும்;

எதிர்காலத்தில் சாத்தியமான நேர்மறையான கடன் மீளாய்வுகளுக்கு வழிவகுத்து, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழு (OCC) மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவற்றுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளின் வெற்றிகரமான முடிவை கோடிட்டுக் காட்டும் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை 2024 யூன் 26 ஆம் திகதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்திருந்தமையினாலும்;

சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான அணுகுகையை இலகுபடுத்தவுள்ள இந்த மூலோபாய மற்றும் அளபுரு அணுகுமுறையின் விளைவாக செம்மைப்படுத்தப்பட்ட கொடுகடன் தரப்படுத்தல்களை அடைவதற்கு இலங்கை எதிர்பார்க்கின்றமையினாலும்;

அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறித்துகாட்டி, இலங்கை அரசாங்கமும், உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவும் (OCC), 2024 யூன் 26 ஆம் திகதி பரிஸில் படுகடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்ததுடன், இலங்கை அரசாங்கம் மற்றும் சீன ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (EXIM Bank) ஆகியவை பெய்ஜிங்கில் கடன் மறுசீரமைப்பு இறுதி உடன்படிக்கையொன்றினை எய்தியிருந்தன. இந்த உடன்படிக்கைகள், இலங்கையானது, கடன் வழங்கும் நாடுகளுடன் புதிய ஈடுபாட்டுடன் அதன் இருதரப்பு பொருளாதார உறவுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வழிவகுக்கின்றமையினாலும்;

சர்வதேச நாணய நிதியத்தின் நிலையாக படுடைனைச் செலுத்துதல் பற்றிய பகுப்பாய்வுடன் ஒத்துப்போகும் வகையில் படுகடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகள், படுகடனை நிலையாகச் செலுத்துவதனை மீள அடைவதற்கு கருவியாக அமைந்துள்ளன. மேலும், அவை விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவி, நிலையான வளர்ச்சியைப் பேணி இலங்கையின் பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்களவு மாற்றியமைப்பதற்கும் தயாராகவுள்ளமையினாலும்;

2024 யூன் 26 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பின்வரும் உடன்படிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு தேவையான அனைத்து அனுமதிகளையும் வழங்குவதற்கு இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(i) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் படுகடன் மறுசீரமைப்புத் தொடர்பில், இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர் குழுவிற்கும் (OCC) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட இறுதி உடன்படிக்கை; மற்றும்

(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கிக்கும் (EXIM Bank) இடையில் 2024 யூன் 26 ஆம் திகதி எய்தப்பட்ட கடன் உடன்படிக்கைகளுக்கான இறுதித் திருத்த உடன்படிக்கை.

*26.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அந்நியச் செலவாணி சட்டத்தின் கீழ் கட்டளை,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 யூன் 18 ஆம் திகதிய 2389/08 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 17 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 30 ஆம் திகதிய 2382/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரை களுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 28 ஆம் திகதிய 2364/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*29.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 4 ஆம் பிரிவின் கீழ் சீட்டாட்டத் தொழில் உரிமமளித்தல் ஒழுங்குவிதிகள் தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 மே 29 ஆம் திகதிய 2386/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 54 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 71(2) ஆம் பிரிவின் (ட) ஆம் பந்தியின் கீழ் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவினதும் 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டாட்சியாதன முகாமை அதிகாரசபையினதும் கலந்தாலோசனையுடனும் கொழும்புத் துறைமுக நகரின் கூட்டாட்சி முகாமை தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 26 ஆம் திகதிய 2394/68 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*32.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— விளையாட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 31 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரினால் ஆக்கப்பட்ட, 2024 மே 03 ஆம் திகதிய 2382/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*33.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*34.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*35.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*36.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 48 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 யூலை 15 ஆம் திகதிய 2393/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36(2) ஆம் பிரிவின் (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 67 ஆம் பிரிவின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 11 ஆம் திகதிய 2327/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அவ் வர்த்தமானப் பத்திரிகையின் சிங்கள மொழிபெயர்ப்பில் சட்டவரைஞரின் இலக்கம் திருத்தப்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் கீழ் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய 2397/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*38.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 36 ஆம் மற்றும் 38 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 67 ஆம் பிரிவின் கீழ் வலு நுகர்வு மட்டக்குறிகள் பற்றிய ஒழுங்குவிதிகள் தொடர்பாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.09.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

39.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

40.

சத்திய ஸ்ரீ கணபதி பக்தி ஜன சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

41.

இலங்கை வரைதல் தொழினுட்பவியலர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

42.

மாகாண சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

43.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46\.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47\.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48\.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49\.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50\.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51\.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52\.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53\.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54\.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55\.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56\.

அருந்திக பர்னாந்து நிவாரண சேவைகள் மற்றும் கொட்பிறி பர்னாந்து ஞாபகார்த்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57\.

ஹெக்டர் அப்புஹாமி ஹெல்பிங் ஹேண்ட் அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

58\.

ஜனரஜ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

59\.

வன்னி மண் அறக்கட்டளை நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2024 ஒக்தோபர் 09, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

611/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போதைய சனாதிபதி, சனாதிபதியாக பதவி ஏற்ற திகதி தொடக்கம் இதுவரை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விஜயத்தின்போதும் சந்தித்த அரச தலைவர்கள் தனித்தனியே யாரென்பதையும்;

(iii) மேற்படி அரச தலைவர்களுடன் இராஜதந்திர ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வொப்பந்தங்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்தின்போதும் சனாதிபதியுடன் கலந்துகொண்டுள்ள ஏனைய பிரதிநிதிகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயத்திற்காகவும் செலவிடப்பட்ட தொகை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

639/2024

கௌரவ பீ.வை.ஜீ ரத்னசேக்கர,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேங்காய் உற்பத்தி மாகாண வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கு நிகராக 2023 ஆம் ஆண்டில் மொத்த தேங்காய் உற்பத்தியின் ஏற்ற இறக்கம் எவ்வாறு காணப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்தி எவ்வளவென்பதையும்;

(ii) தேயிலை ஏற்றுமதியின் மூலம் மேற்படி ஆண்டில் ஈட்டப்பட்டுள்ள வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் உள்ளிட்ட பெருந்தோட்டப் பயிர்களுக்காக தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி நிறுவனங்களினால் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி ஆராய்ச்சிகளின் பிரதான கண்டுபிடிப்புகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

1090/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள குத்தகைக் கம்பனிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) முறையாகப் பதிவு செய்யப்படாத குத்தகைக் கம்பனிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) குத்தகைக் கம்பனிகள் பல்வேறு வட்டி விகிதங்களை அறவிடுவதன் காரணமாக குறித்த கம்பனிகளுடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள தரப்பினர்கள் பாரிய அசௌகரியத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி கம்பனிகள் அறவிடும் வட்டி வீதங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) குத்தகை வசதிகளைப் பெற்றுக்கொண்டுள்ள வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பதற்காக பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1129/2024

கௌரவ டீ. வீரசிங்க,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு;

(ii) மேற்படி காணிகளில் தற்போது பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(iii) மேற்படி காணிகளில் தற்போது உறுதிகள் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு;

(iv) எதிர்காலத்தில் உறுதிகள் வழங்கப்படவுள்ள காணிகளின் அளவு;

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுக்கும் அமைய தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1156/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியுமா என்பதையும்;

(ii) மேற்படி வாகனங்களில் பயணிகள் ஏற்றிச் செல்லப்படுகின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) குறித்த வாகனங்களில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான அதிகாரம் யாதென்பதையும்;

(iv) பாதுகாப்பற்ற முறையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதன் காரணமாக மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2024 ஒக்தோபர் 10, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1246/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) இலங்கையில் 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' இனால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் முன்னேற்றத்தினையும்;

(ii) இந்தச் சபைக்கும் பொதுமக்களுக்கும் மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுவின் அறிக்கை கிடைக்கச் செய்யப்படும் திகதியினையும்;

(iii) விசாரணையில் எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் தொடர்பில் 'செனல் 4' முன்வைத்த இதே குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காகப் பாராளுமன்ற விசேட குழுவொன்றினை நியமித்தமைக்கான காரணங்களையும்;

(ii) மேற்படி குழுவின் முன்னேற்றத்தினையும்;

(iii) எவ்வித முன்னேற்றமும் இல்லையெனின் அதற்கான காரணங்களையும்;

(iv) மேற்படி குழுவின் பரிமாணங்களையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) குறிப்பிட்ட தாக்குல்கள் பற்றிய ஒரு சுயாதீனமான, சர்வதேச விசாரணைக்கான அழைப்புக்களை அரசாங்கம் மீண்டும் மீண்டும் புறக்கணித்தமைக்கான காரணங்களையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1251/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு.நிலந்த ஜயவர்தன தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் யாவை என்பதையும்;

(ii) அவர் பொலிஸ் நிர்வாகப் பிரிவின் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி, மேற்படி பதவிக்கு அவர் பரிந்துரை செய்யப்பட்ட திகதி மற்றும் குறித்த பதவிக்கு அவரைப் பரிந்துரை செய்த நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள மேற்படி உத்தியோகத்தரை குறித்த பதவிக்கு நியமிப்பதற்கு ஏதுவாக அமைந்த விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனம் தொடர்பில் மீண்டும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1287/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ‘சிரம வாசனா நிதியம்’ ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி நிதியத்தின் மூலமாகப் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கப்பெறும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிதியத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1705/2024

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாரிய அளவில் அதிகரித்துள்ள விவசாய விதைகளின் விலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுமா என்பதையும்;

(ii) விவசாய விதைகளை இறக்குமதி செய்கின்றபோது கமத்தொழில் அமைச்சினால் எவ்வாறான இடையீடு மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற விவசாய விதைகளின் விலைகளை கட்டுப்படுத்துவதற்கும் அவற்றின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் இடையீடு செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஒரு வருடத்தில் இறக்குமதி செய்யப்படுகின்ற விவசாய விதையினங்கள், அவ்வொவ்வொரு வகையிலும் இறக்குமதி செய்யப்படுகின்ற அளவுகள் மற்றும் அதற்கென உறப்படுகின்ற செலவுகள் என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1731/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்கொழும்பு சிறைச்சாலையில் காணப்படும் அதிக சன நெரிசலுக்குத் தீர்வாக குறிப்பிட்ட சிறைச்சாலையை வென்னப்புவ பிரதேசத்தில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்கு அடிப்படைச் செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருப்பின், அத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1745/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் புகையிரதம், திருகோணமலையிலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் நேரங்கள் மற்றும் கொழும்பை வந்தடையும் நேரங்கள் என்பன தனித்தனியே யாதென்பதையும்;

(ii) திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் இரவு நேர புகையிரதம் அதிகாலை 3.30 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடைகிறது என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) கொழும்பு நகரின் பொதுப் போக்குவரத்துச் சேவைகள் மு.ப. 5.00 மணியின் பின்னர் ஆரம்பிக்கப்படுவதன் காரணமாக மேற்குறிப்பிட்ட புகையிரதத்தில் கொழும்புக்கு வரும் பொது மக்கள் பொதுப் போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு அதிக நேரம் காத்திருக்க வேண்டி இருப்பதால் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1754/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள தலசீமியா நோயாளிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கமைவாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) தனியார் வைத்தியசாலையொன்றில் தலசீமியா நோயாளியொருவருக்கு மரபணு மாற்று அறுவை சிகிச்சையொன்றை மேற்கொள்வதற்காக சுமார் 48 இலட்சம் ரூபா பணம் செலவாகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறுவை சிகிச்சையை அரச வைத்தியசாலைகளில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1874/2024

கௌரவ ரோஹினீ குமாரி விஜேரத்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆயுர்வேத மருத்துவப் பட்டம் (BAMS, BUMS, BSMS) பயின்ற சுமார் 300 பேர் இதுவரையிலும் அவர்களுக்குரிய உள்ளிருப்புப் பயிற்சியின்றி இருப்பதை அறிவாரா;

(ii) அவர்களை உள்ளிருப்புப் பயிற்சிக்கு அனுப்பாமைக்கான காரணங்கள் யாவை;

(iii) அவர்களை உள்ளிருப்புப் பயிற்சிக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2020/2024

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் பேணப்பட்டு வந்த வரையறுக்கப்பட்ட எதிரிசிங்க ட்ரஸ்ட் இன்வெஸ்ட்மென்ட் (ETI) நிறுவனம் 2018 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் அதன் வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்தியதன் காரணமாக அதன் வாடிக்கையாளர்கள் அசௌகரியங்களுக்கு ஆளானார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2023 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் நிறுவனத்தைக் கலைக்க நீதிமன்றம் தீர்ப்பளித்த பின்னர் அந்த நிறுவனம் கொண்டிருந்த சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(iii) அதிலிருந்து இந்த நிறுவனத்தின் வைப்பாளர்களுக்குச் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி பணம் செலுத்தப்படும் திட்டவட்டமான திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இத்தகைய சந்தர்ப்பத்தில் கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனியொன்றின் உரிமையாளர்களுக்கு அது தொடர்பில் உள்ள பொறுப்புகள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்படவுள்ள அடுத்தகட்ட நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2139/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை, ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவகத்தின் கமத்தொழில் பற்றிய டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு இதுவரை சுமார் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மேற்படி பாடநெறியை பயிலும் மாணவர்களின் செயன்முறைசார் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான அம்சங்களாக அமையும் பயிர்செய்கை பண்ணை, கால்நடைப் பண்ணை, வயல் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) விவசாயப் பிரிவுத் தலைவர்களினால் மேற்படி பாடநெறி முறையாக கண்காணிப்புச் செய்யப்படாமை காரணமாக கமத்தொழில் பாடநெறிக்குத் தேவையான அத்தியாவசிய அம்சமொன்றான கல்விச் சுற்றுலா ஒழுங்கு செய்யப்படுவதில்லை என்பதையும்;

(iii) விவசாயப் பாடநெறியை கற்பதற்கு உயர் கேள்வி காணப்படுகின்ற போதிலும் அதற்குத் தேவையான போதனாசிரியர்களின் பற்றாக்குறையை தவிர்த்துக் கொள்வதற்காக வெளி போதனாசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி சிக்கல்களுக்கு வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2024 ஒக்தோபர் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1924/2024

கௌரவ ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கே தனித்துவமானதும் அழிந்து செல்லும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதுமான மூலிகைத் தாவர வகைகள் இனங்காணப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி மூலிகைத் தாவர வகைகள் யாவையென்பதையும்;

(iii) அவற்றில் செம்பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ள மூலிகைத் தாவர வகைகள் யாவையென்பதையும்;

(iv) அந்த மூலிகைத் தாவர வகைகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

1945/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள கரும்பு இனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி இனங்கள் யாவை என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கையில் பயிரிடப்படுகின்ற கரும்பு இனங்கள் யாவை என்பதையும்;

(iv) மொலாசஸ் அதிகமாக உற்பத்தி செய்யும் கரும்பு இனங்கள் யாதென்பதையும்;

(v) மொலாசஸ் குறைவாக உற்பத்தி செய்யும் கரும்பு இனங்கள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1975/2024

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளின் எண்ணிக்கையும் நடுத்தர வகுப்பினருக்கான வீடுகளின் எண்ணிக்கையும் எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வீடுகளில் தற்போது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளின் எண்ணிக்கையும் நடுத்தர வகுப்பினருக்கான வீடுகளின் எண்ணிக்கையும் எத்தனை என்பதையும்;

தனித்தனியாக வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

2013/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்வதற்கு நகரத்தை சூழவுள்ள காணிகளை அரசாங்கம் சுவீகரித்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி காணிகளின் உரிமையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) சுவீகரிக்கப்பட்ட மேற்படி காணிகளுக்கான நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், வழங்கப்பட்ட மொத்த நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு காணி உரிமையாளருக்கும் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

2027/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் —

(i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை நிர்மாணிக்கப்பட்ட யானை பாதுகாப்பு வேலிகளின் நீளம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) எதிர்காலத்தில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள யானை பாதுகாப்பு வேலிகளின் நீளம் கிலோமீற்றர்களில் எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2044/2024

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றளவில் இலங்கையில் ஓய்வூதியம் பெறுகின்ற சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு சனாதிபதிக்கும் பாராளுமன்ற உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள, அரச கொடுப்பனவுகளைப் பெறுகின்ற பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிப் பெயரின் அடிப்படையில் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட சனாதிபதிகளினதும் பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பாதுகாப்புக்காக முப்படை மற்றும் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சனாதிபதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள முப்படை மற்றும் இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2056/2024

கௌரவ வேலு குமார்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1992 ஆம் ஆண்டு அரசாங்கத் தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டபோது, கண்டி மாவட்டத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போஹில் தோட்டத்தில் காணப்பட்ட பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரிவுகளில் 2015ஆம் ஆண்டளவில் பயிரிடாது கைவிடப்பட்ட பிரிவுகள் இருந்தனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி தோட்டத்தின் காணித் துண்டுகள் / கட்டடங்கள் வெளி ஆட்களுக்கு / தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய ஒவ்வொரு நபர் / தனியார் நிறுவனத்தின் பெயர் மற்றும் வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் / கட்டடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி(i) இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு காணித் துண்டில் / கட்டடத்தில் வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2079/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை அரசாங்கத்துக்குச் சொந்தமான வானொலி அலைவரிசைகள் மற்றும் தொலைகாட்சி அலைவரிசைகள் ஊடாக நேரடி வர்ணனைச் சேவை வழங்கப்பட்ட மத வைபவங்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வைபவங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வைபவங்களை ஒளி/ஒலிபரப்பு செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வைபவங்களை ஒளி/ஒலிபரப்பு செய்தமைக்காக இதுவரை அறவிடப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி அறவிடப்பட வேண்டியுள்ள தொகையை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

2089/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற தனியார் மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையத்தின் பெயர் மற்றும் உரிமையாளரின் பெயர் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலையத்தில் இருந்தும் கொள்வனவு செய்யப்பட்ட மின் அலகுகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காகச் செலுத்தப்பட்ட பணத்தெகை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தனியார் மின்னுற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வது தொடர்பில் கையொப்பமிட்டுள்ள உடன்படிக்கைகளின் நிபந்தனைகள் இலங்கை மின்சார சபைக்குப் பாதகமானவை என்பதை அறிவாரா என்பதையும்?

(ii) தனியார் மின்னுற்பத்தி நிலையங்களில் இருந்து மின்சாரம் கொள்வனவு செய்வது தொடர்பில் ஒரு புதிய சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

2156/2024

கௌரவ சட்டத்தரணி ரவூப் ஹக்கீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'A' தரத்திலான ஆதார வைத்தியசாலையாகவிருக்கும் புத்தளம் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு, வதிவிட நோயாளர் பிரிவு மற்றும் பல்வேறு கிளினிக்குகளுக்கு வருகை தருகின்ற நோயாளர்களுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் இடவசதிகள் அவ்வைத்தியசாலையில் போதுமானதாக இல்லை என்பதையும்;

(ii) இந்த வைத்தியசாலைக்கு போதிய பணியாட்டொகுதி இல்லை என்பதுடன், மருத்துவர், அபிவிருத்தி அலுவலர், கவனிப்பாளர், இதயத்துடிப்பு மின்வரைபு பதிவாளர், நோயாளர் அறை எழுதுநர், நீர்க்குழாய்த் தொழிலாளி, தையல் ஊழியர் (பெண்), சிற்றூழிய மேற்பார்வையாளர், சமையற்காரர், தொலைபேசி இயக்குநர், மேசன், தச்சன் மற்றும் சாரதி போன்ற பதவிகளில் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

1.

பா. 2/2024

கௌரவ புத்திக பத்திரண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2.

பா. 3/2024

கௌரவ புத்திக பத்திரண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

3.

பா. 4/2024

கௌரவ புத்திக பத்திரண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

4.

பா. 5/2024

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

5.

பா. 6/2024

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

6.

பா. 7/2024

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

7.

பா. 8/2024

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

8.

பா.9/2024

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை வெளியிடுதல்,— மனித பரிணாம வளர்ச்சியிலிருந்து தொல்பொருளியல், இலக்கியம், நாட்டுப்புறவியல், உரோம, கிரேக்க மற்றும் பாரசீக வரலாறுகளை ஆய்வு செய்து இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் குழாத்தின் கீழ் அரச அனுசரணையுடன் வெளியிடுவதற்கு உகந்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

9.

பா. 11/2024

கௌரவ ஹேஷா விதானகே,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

10.

பா. 12/2024

கௌரவ ஹேஷா விதானகே,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

11.

பா. 13/2024

கௌரவ ஹேஷா விதானகே,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டம் ஒன்றை  தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

12.

பா. 14/2024

கௌரவ ஹேஷா விதானகே,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ  கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

13.

பா. 15/2024

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

14.

பா. 16/2024

கௌரவ ஹேஷா விதானகே,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

15.

பா 17/2024

கௌரவ ஹேஷா விதானகே,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

16.

பா. 19/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் அரசியலமைப்பை ‘பிரெயில்’ எழுத்து முறையிலும் “கேட்பொலி” (audio) வடிவத்திலும் தயார்செய்தல்,— அரசியலமைப்பானது எந்தவொரு நாட்டினதும் அடிப்படைச் சட்டமாகவும் அரசின் அடிப்படை மாதிரியாகவும் அமைந்திருப்பதாலும், சுமார் இருபத்திரண்டு மில்லியன்களான இலங்கைப் பிரசைகளில் சுமார் இரண்டு மில்லியன் பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளதாலும், மாற்றுத்திறனாளி களுக்கு மத்தியிலும் சுமார் ஆறு இலட்சம் பேர் செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற பிரசைகளாக உள்ளதாலும், நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய அறிவு மற்றும் புரிதலைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற மக்களுக்காக இலங்கையின் அரசியலமைப்பை ‘பிரெயில்’ எழுத்துமுறையிலும் ‘கேட்பொலி’ (audio) வடிவத்திலும் தயார் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

17.

பா. 20/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய தகுதியின் அடிப்படையிலும் பாடசாலை அடிப்படையிலும் தலா 50% அமையும் வகையில் பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் சுட்டியாகிய Z புள்ளியை (Z-score) கணிப்பிடுதல்,— க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் கலைப் பீடம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக பீடங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் அடிப்படை மற்றும் சுட்டி Z புள்ளியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாலும், இந்த முறையியலுக்கு அமைவாக Z புள்ளியில் 40% தேசிய தகுதியின் (national merits) அடிப்படையிலும் 55% மாவட்ட அடிப்படையிலும் (district basis) 5% மிகவும் பின்தங்கிய மாவட்டங்களின் (remote districts) அடிப்படையிலும் அமையும் வகையில் கணிப்பீடு செய்யப்படுவதாலும், ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒரே சமனான புள்ளி மட்டத்தை அல்லது பெறுமானத்தை பிரதியீடு செய்தல் நீதியானதாகவும் நியாயமானதாகவும் அமையாததாலும், மாவட்ட மற்றும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் எனும் அடிப்படைக்குப் பதிலாக பாடசாலை அடிப்படையை பிரதியீடு செய்வதன் மூலம் பாடசாலை முறைமையில் உள்ள உயர்தர பிரிவுகளைக் கொண்ட மூவாயிரத்து நாற்பத்திரண்டு (3042) பாடசாலைகளை சில தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தி பல்கலைக்கழக அனுமதிக்கான தேசிய தகுதியின் கீழ் 50% மற்றும் பாடசாலை அடிப்படையின் கீழ் 50% என்றவாறு பல்கலைக்கழக அனுமதிக்கு Z புள்ளியை கணிப்பிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

18.

பா. 21/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுதல்,— இலங்கையின் சிங்கள சமூகத்தில் தனிநபர் பெயர்களை சூட்டுகின்ற சந்தர்ப்பங்களில் குடும்பப் பெயரானது பெரும்பாலும் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் காணப்பட்ட கடமைகளையும் மன்னர்களுக்கான பணியையும் பின்புலமாகக்கொண்டு அமைகின்ற காரணத்தினாலும், சில குடும்பப் பெயர்கள் மேற்படி கடமைகளுக்குரிய சாதியினை மேலெழுப்பும் வகையில் அமைந்துள்ளதாலும், நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது தேர்தல்களில் வாக்களிப்பதற்காக வாக்காளர்களின் பெயர்கள் அழைக்கப்படுகின்ற போது அல்லது பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களில் பட்டதாரிகள் அழைக்கப்படுகின்ற போது அல்லது தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கின்ற போது முதற்பெயருடன் குடும்பப் பெயரையும் சத்தமிட்டு அழைப்பதனால் பெரும்பாலானவர்கள் பாரிய அசௌகரியத்திற்கு ஆளாகின்ற காரணத்தினாலும், தற்போதைய சந்ததியினரால் நிராகரிக்கப்படுகின்ற நவீன உலகத்திற்குப் பொருந்தாத இச்சட்டத்தினை, வழக்கத்தினை அல்லது மரபினை நீக்கி மக்கள் முன்னிலையில் தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

19.

பா. 22/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு 2023 ஆம் ஆண்டளவில் பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று என்னால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

20.

பா. 23/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கையில் ஆகக்குறைந்தது 5% பிரதிநிதித்துவத்தை அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு வழங்குதல்,— இலங்கையில் இறுதியாக நடாத்தப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி நாட்டில் அங்கவீனர்களின் எண்ணிக்கையானது மொத்த சனத்தொகையில் 8%ஐ விஞ்சியுள்ளதாலும், கிராமிய நிருவாகம் இடம்பெறுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் முதல் தேசிய கொள்கைகள் உருவாக்கப்படும் பாராளுமன்றம் வரையிலான மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கு அங்கவீனர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகவே காணப்படுவதாலும், அங்கவீனமுற்ற இந்நாட்டு பிரஜைகளுக்கான கொள்கை உருவாக்கம் இடம்பெற்றிருப்பதும் இடம்பெறுவதும் வளர்ச்சியடைந்த நாடுகளின் கோட்பாடுகளுக்கு ஏற்பவல்ல என்பதாலும், அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்களைத் தயார் செய்கையில், ஆகக்குறைந்தது 5%மான பிரதிநிதித்துவம் அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு கிடைக்கும் வகையில் அரசாங்கம் உரிய சட்டங்களைத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

21.

பா. 24/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

22.

பா. 25/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நில்வளா கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தை துரிதமாக செயற்படுத்தல்,— 1980 ஆம் தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட நில்வளா கங்கை அபிவிருத்தித் திட்டத்தை பூரணப்படுத்த முடியவில்லை என்பதால் மாத்தறை மாவட்டத்திலும் நில்வள பள்ளத்தாக்கிலும் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையும் பொருளாதாரமும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாலும், ஊறுபொக்கு ஓயா மற்றும் கிரம-ஆர என்பவற்றை அம்பாந்தோட்டை வறண்ட வலயத்திற்குத் திசைதிருப்புதல் மற்றும் கீழ் பள்ளத்தாக்கில் பட்டுவிட்ட நீர்த்தேக்கம், அத்துரலிய நீர்த்தேக்கம், கடவெத்துவ நீர்த்தேக்கம் மற்றும் தெதியகல நீர்த்தேக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களை அமைத்தல் மற்றும் பாதுகாப்பான வலயம் மற்றும் பாதுகாப்பற்ற வலயங்கள் தொடர்பில் மீளவும் கற்றாராய்ந்து கைவிடப்பட்ட அணைகளை (bunds) மீண்டும் நிர்மாணித்தல் என்பவற்றை முதலாகக் கொண்ட மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய நில்வள கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களை துரிதமாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

23.

பா.30/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

24.

பா.31/2024

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

25.

பா.32/2024

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

26.

பா.33/2024

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

27.

பா.34/2024

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

28.

பா.35/2024

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

29.

பா.36/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

30.

பா.38/2024

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

31.

பா.39/2024

கௌரவ ரோஹண பண்டார,— டிஜிட்டல் கல்வி முறைமைக்குத் தேவையான அடிப்படை அடித்தளத்தை உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலகம் தற்போது மிகவும் வேகமாக மாறிவரும் பின்னணியில் அதற்கமைவாக கல்வி முறையும் மாற்றமடைய வேண்டுமென்பதால் இலங்கையிலும் டிஜிட்டல் கல்வி முறைமைக்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

32.

பா.41/2024

கௌரவ ரோஹண பண்டார,— கூட்டுறவு கிராமிய வங்கிகளில் வைப்பாளர்களின் வைப்புக்களைப் பாதுகாத்தல்,— கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்புடைய கிராமிய கூட்டுறவு வங்கிகள் மீது கிராமிய மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை உயர் மட்டத்தில் கணப்படுகின்ற போதிலும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தெஹிவளை-கல்கிசை கூட்டுறவு கிராமிய வங்கி, மஹரகம கூட்டுறவு கிராமிய வங்கி போன்ற கிராமிய வங்கிகள் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதால் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள அதன் வைப்பாளர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவதற்குப் பொருத்தமான வேலைதிட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

33.

பா.42/2024

கௌரவ ரோஹண பண்டார,— ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை விளைதிறன்மிக்க வகையில் முதலீடு செய்தல்,— தனியார் துறை ஊழியர்களின் நலன்புரிக்காக தாபிக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் வசமுள்ள பணத்தை பங்குச் சந்தையில் பட்டியலிடப்படாத நிறுவனங்களில் முதலீடு செய்வதனூடாக எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப் பெறவில்லையென தேசியக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால், தனியார் துறையின் ஊழியர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் வகையில் மேற்படி பணத்தை பயன்தரும் துறைகளில் முதலீடு செய்வதற்கு அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

34.

பா.43/2024

கௌரவ ரோஹண பண்டார,— புகையிரத திணைக்களத்தில் சமகால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிறுவனக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்,— துரிதமாக தொழில்நுட்பம் மாற்றமடைந்து வரும் உலகில், காலனித்துவக் காலத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட திணைக்களச் சட்டகத்தின் கீழ் புகையிரத திணைக்களத்தை மேற்கொண்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதால், மேற்படி திணைக்களத்தில் சமகால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிறுவனக் கட்டமைப்பொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

35.

பா.44/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதியியல் எழுத்தறிவை மேம்படுத்துதல்,— எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் அதாவது எழுத்தறிவு இலங்கையில் உயர் மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும், நிதியியல் எழுத்தறிவு இன்னும் கீழ் மட்டத்திலேயே காணப்படுவதனால், பாடசாலைப் பருவத்திலிருந்தே நிதியியல் எழுத்தறிவினை மக்கள் மயப்படுத்துவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

36.

பா. 46/2024

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— அரசியல் கட்சிப் பதவி தாங்குநர்களில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்,— அரசியலில் பெண்களின் பங்கேற்பினையும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிக்கும் முழுமை அணுகுமுறையாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியும் தமது நிறைவேற்றுக் குழுவில் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டத்தில்/இயல்திறனில் குறைந்தபட்சம் 30% மான பெண்களை நியமிக்கத் தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

37.

பா.47/2024

கௌரவ ரஊப் ஹகீம்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதைத் தவிர்த்து தகனம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல்,— கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை நல்லடக்கம் செய்வதற்கான இயலுமை உள்ளதென உலக சுகாதார அமைப்பு அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்த நிலையில் மேற்படி சடலங்களை நல்லடக்கம் செய்வதன் மூலம் நிலக்கீழ் நீரில் வைரஸ் கலப்பதற்கான அபாயம் காணப்படுவதாக 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்படி சடலங்கள் உறவினர்களின் உடன்பாடின்றித் தகனம் செய்யப்பட்டதனாலும், பின்னர், அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் செயற்பட்டமையானது சரியானதல்ல எனத் தெரிவித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோரியதனாலும், இந்தத் தொற்றினால் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு தமது சமய ரீதியான இறுதிக் கிரியைகளை மேற்கொள்வதற்கோ அல்லது குறித்த சடலங்களைப் பார்வையிடுவதற்கோ சந்தர்ப்பம் இழக்கச் செய்யப்பட்டதனாலும், இது தொடர்பாக உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் எழுந்த எதிர்ப்புகளும் அழுத்தங்களும் காரணமாக தகனம் செய்வதற்குப் பதிலாக மட்டக்களப்பு ஓட்டமாவடி, மஜ்மா நகர் எனும் தனிமையான பிரதேசத்தில் மேற்படி சடலங்கள் நல்லடக்கம் செய்யப்பட்டதனால் உயிரிழந்தவர்கள் தொடர்பாக நிறைவேற்ற வேண்டியிருந்த சமயச் சடங்குகள் மற்றும் இறுதி அஞ்சலி செலுத்துவதற்கான உரிமையை உறவினர்கள் இழந்ததனாலும், உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய உறவினருக்கு நியாயத்தை நிலைநாட்ட வேண்டியதன் தேவைப்பாடு மற்றும் பொது மக்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத் தரப்பினர் இழைத்துள்ள மேற்படி பாரதூரமான தவறுகளை விசாரணை செய்து பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்காக பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

38.

பா. 48/2024

கௌரவ டீ. வீரசிங்க,— விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் பழவகைகளை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தல்,— இலங்கைக்கு பழவகைகளை இறக்குமதி செய்வதற்காக அதிகளவு நிதி செலவிடப்படுவதாலும், நாட்டில் எங்கும் விளையும் மூவகைப் பழங்களான அன்னாசி, பப்பாளி மற்றும் வாழைப்பழம் என்பன தற்போது இறக்குமதி செய்யப்படுவதாலும், பெரியவர்கள் மற்றும் பிள்ளைகளின் விற்றமின் தேவையை பூர்த்தி செய்யும் இம்மூவகைப் பழங்களை நாடு முழுவதும் பிரசித்தப்படுத்தவும் மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

39.

பா. 49/2024

கௌரவ டீ. வீரசிங்க,— உள்நாட்டு குரக்கன் உற்பத்தியை விஸ்தரித்தல்,— இலங்கையில் பழங்காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்ட குரக்கன், பல்வேறு நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான இயலுமையைக் கொண்டதென ஊட்டச்சத்து நிபுணர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாலும், தற்போது அதிகளவான குரக்கன் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதால் அதற்காக பெருமளவு அந்நியச் செலாவணி செலவு செய்யப்படுவதாலும், உள்நாட்டு குரக்கனின் புதிய வகையினங்களை அடையாளங்கண்டு அவற்றை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்தி உள்நாட்டுக் குரக்கன் உற்பத்தியை விஸ்தரிப்பதற்காக அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

40.

பா. 50/2024

கௌரவ டீ. வீரசிங்க,— பல்வேறு திறன்களைக்கொண்ட மூத்த பிரசைகளை தேசிய பொருளாதாரத்தில் பங்குகொள்ளச்செய்தல்,— மூத்த பிரசைகளில் பெரும்பாலானவர்கள் பல்வேறு தொழில்சார் திறன்களைக் கொண்டவர்களாக இருப்பதாலும், சூழல் நேயம் மிக்க உற்பத்திகளை மேற்கொள்ளும் இயலுமை மற்றும் அறிவு அவர்களிடம் காணப்படுகின்ற போதிலும் அது தொடர்பில் முறையான கற்றாராய்வு மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும், தேசிய பொருளாதாரத்திற்கு அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பங்களிப்பை முனைப்புடன் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறையொன்று காணப்படாமையாலும், முதியோர் இல்லங்களில் அல்லது தங்களது வீடுகளில் தனிமையில் வாழ்ந்துவரும் மேற்படி மூத்த பிரசைகளை அவர்களது தொழில்சார் திறன்களை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை மேற்கொள்வதற்கு ஊக்குவித்து அவ்வுற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதனூடாக அவர்களுக்கான வருமான வழியொன்றை ஏற்படுத்துவதற்கும் மன ஒருமைப்பாட்டை பேணிச் செல்வதற்கு உதவியாக அமைவதற்கும் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

1.

பா. 26/2024

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல் பீரிஸ்

கௌரவ (கலாநிதி) வீ.இராதாகிருஷ்ணன்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ டப்ளியூ. எச். எம். தர்மசேன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— மக்களுக்கு சேமநலன் அளிக்கின்ற அரசாங்கத்தினது தலையான கடமைக்கும், இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் சட்டவிதிகளுக்கும் முரணாக இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள மின் கட்டணத் திருத்தம் மற்றும் அதற்கு 'அங்கீகாரம்' பெற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களை ஆராய்வதற்கான பாராளுமன்ற விசேட குழு,— அரசியலமைப்பின் 3 ஆவது உறுப்புரையினால் இறைமையதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களின் பயன்பாட்டுக்கான மின் பிறப்பாக்கம், கடத்துகை, விநியோகம் மற்றும் வழங்குதல் என்பன 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தினால் ஒழுங்குறுத்தப்படுவதுடன் சட்டத்தினால் தாபிக்கப்பட்டுள்ள பகிரங்க அதிகாரசபைகள் மூலம் செயற்படுத்தப்படுவதனாலும்;

இலங்கை மின்சாரச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் மூலம் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகிக்கும் கடமை 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் அளிக்கப்பட்டதாலும்;

'தமது வாடிக்கையாளர்களுக்கு அதிக இலாபகரமானதும் வினைத்திறன்மிக்கதுமான சேவையினை வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் உரிமப்பத்திரதாரிகள் மற்றும் இதர மின்சக்தி தொழில்முயற்சிகளிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்களையும் இதர அறவீடுகளையும் ஒழுங்குப்படுத்தல்' இலங்கை மின்சாரச் சட்டத்தின் 3(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் பணி என்பதனாலும், அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற மேற்படி அத்தியாவசிய பொதுப் பயன்பாடுகளின் இறுதிப் பயனாளிகளாக எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இருக்க வேண்டியவர்கள் அரசியலமைப்பின் மூலம் இறைமையதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மக்களே என்பதனாலும்;

ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை அரசியலமைப்புப் பேரவையின் ஒருப்பாட்டுடன் மாத்திரமே அமைச்சரினால் நியமிக்க முடியுமென்பதோடு, 6 ஆவது பிரிவின் பிரகாரம் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினால் நேரடியாக செயற்படுத்தப்படுகின்ற ஒழுக்க கட்டுப்பாட்டுக்குள் உட்படுவார்கள் என்ற ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள அச்சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் மூலம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதனாலும்;

2023.05.24 ஆம் திகதி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரை பதவி நீக்குவது தொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்பட்ட வேளையில் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் படி மின் விநியோகம் தொடர்பான அனுமதிப்பத்திரதார அரச கூட்டுத்தாபனமாகிய இலங்கை மின்சார சபை (இ.மி.ச) 2023.01.05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கட்டணத் திருத்தம் மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவின் அனுமதியை எதிர்பார்த்ததுடன், அதற்கமைவாக ஆணைக்குழுவானது 3 தேசிய பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பிரசுரித்து பங்கீடுபாட்டாளர்களின் கருத்துக்களை ஆராய்வதற்குத் தீர்மானித்து இலங்கை மின்சார சபையிடமிருந்து பல தெளிவுபடுத்தல்களைக் கோரியிருந்தமையினாலும்;

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரானவர் இலங்கை மின்சார சபையினால் முன்மொழியப்பட்ட மின்கட்டண அதிகரிப்பினை இலங்கை மின்சார சபை முன்மொழிந்துள்ள வகையில் மேற்கொள்வது அவசியமற்றதென தொடர்ச்சியாக தெரிவித்தமையினாலும்;

2023.02.08 ஆம் திகதி பிரதித் தவிசாளர் உட்பட ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்கள் இராஜினாமாச் செய்ததுடன், 2022 ஒற்றோபர் மாதம் பிரதமரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறை அனுமதியின் பிரகாரம் 2023.02.13 ஆம் திகதி தொடக்கம் 2023.02.27 ஆம் திகதி வரையில் தவிசாளர் இலங்கைக்கு வெளியில் இருந்தமையினாலும்;

(முன்பிருந்து நிலவிய வெற்றிடத்திற்காக) 2023.02.02 ஆம் திகதி மற்றும் (2023.02.08 ஆம் திகதி இராஜினாமாச் செய்ததன் காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்காக) 2023.02.13 ஆம் திகதி என இரண்டு தினங்களில் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் இருவர் நியமிக்கப்பட்டதனாலும்;

புதிதாக நியமனஞ் செய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்களும் உள்ளடங்கலாக ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் இலங்கை மின்சார சபையினால் வேண்டுகோள் விடுக்கப்பட்ட மொத்தக் கட்டணத் திருத்தத்திற்கு “அங்கீகாரம்” வழங்குவதற்காக எனத் தெரிவித்து 2023.02.14 ஆம் திகதி கூட்டம் கூடியிருப்பதாகத் தெரிவதோடு, கட்டணத் திருத்தத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டதாக ஆணைக்குழுவின் பதிற் கடமையாற்றும் பணிப்பாளர் தலைமையதிபதியினால் இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவின் இரண்டு உறுப்பினர்களாலும் கடிதத்தில் கையொப்பம் இடப்பட்டு, ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டிருப்பதனாலும்;

2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவில் தவிசாளரானவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களையும் கூட்டுதல் வேண்டுமென திட்டவட்டமாக விதித்துரைக்கப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவானது பங்கீடுபாட்டாளர்களின் கருத்துக்களை ஆராய்ந்து வருகையில் பொதுமக்களின் மீது பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தும் கட்டணத் திருத்தம் போன்ற தீர்மானகரமான விடயமொன்று தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளும் தத்துவம் உறுப்பினர்கள் மூவருக்கு இருத்தலாகாது என்பதனாலும்;

தவிசாளரானவர் ஆணைக்குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் கூட்டத்துக்குத் தவிசாளர் வருகைதராதிருக்கும்போது பிரதித் தவிசாளர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டுமென 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், தவிசாளர் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்திலும் பிரதித் தவிசாளர் இராஜினாமாச் செய்திருந்த நிலையிலும் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் கூட்டத்திற்கு வேறு எவராலும் தலைமைதாங்க முடியாதிருந்ததனாலும்;

எழுத்துமூலமாக முன்வைக்கப்பட வேண்டிய விடயங்களினால் ஆணைக்குழுவின் எல்லா முடிபுகளும் நியாயப்படுத்தப்படுதல் வேண்டுமென 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 9(6) ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, "அங்கீகாரம்" வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குறிப்பிட்ட கடிதத்தில் எந்தவொரு காரணங்களும் உள்ளடங்கவில்லை என்பதுடன், அதன்பிரகாரம், இது ஆரம்பம் முதல் வெறிதான கடிதமாக அமைவதனாலும்;

ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இலச்சினையானது' ஆணைக்குழுவின் அனுமதியுடனன்றி ஏதேனும் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படலாகாதென' 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10(இ) ஆம் பிரிவில் திட்டவட்டமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு சட்டத்தின் 3(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவானது ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட "கூட்டத்தின்" கூட்டக் குறிப்புகள், ஆணைக்குழுவின் கூட்டக் குறிப்புப் புத்தகத்தில் உள்ளடக்கப்படாமையினால் 'கூட்டம்' எந்த இடத்தில் நடாத்தப்பட்டது, இச்செயற்பாட்டுக்கு வருகை தந்திருந்த மற்றும் அதில் பங்கேற்ற நபர்கள் யாவர் என்ற விடயங்கள் பற்றிய தெளிவின்மை காணப்படுவதனாலும்;

(i) சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ளவாறு தவிசாளரால் கூட்டம் கூட்டப்படவில்லை என்பதுடன், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நடாத்தப்படாமை;

(ii) சட்டத்தின் 9(6) ஆம் பிரிவின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள காரணங்களினால் மேற்படி முடிபு நியாயப்படுத்தப்படாதுள்ளமை; மற்றும்

(iii) ஆணைக்குழுவின் அதிகாரத்துடன் 'அங்கீகாரம்' வழங்கப்பட்டதாக உணர்த்துவதற்கு சட்டத்தின் 10(இ) பிரிவுக்கு முரணாக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய தண்டனைச் சட்டக்கோவையின் 453 ஆம் பிரிவில் பொருட்கோடல் செய்யப்பட்டுள்ள வகையில் மேற்படி ஆவணமே பொய்யானது என்பதுடன், தண்டனைச் சட்டக்கோவையின் 454 ஆம் பிரிவுக்கு அமைய, பொய்யாவணம் புனைதலாகக் கருதி அது தண்டனை வழங்க வேண்டிய விடயமொன்றாகும் என்பதோடு, அதற்கு உடந்தையாக இருந்தமையின் அடிப்படையில் மேற்படி செயன்முறைக்காக வருகை தந்திருந்தவர்கள் மற்றும் அதில் பங்கேற்றிருந்தவர்கள் பொய்யாவணம் புனைதல் எனும் குற்றத்தைப் புரிவதற்கான சூழ்ச்சிக்கு குற்றவாளிகளாதல்;

ஆகிய விடயங்களை கவனத்தில் கொள்ளும்போது இலங்கை மின்சார சபையினால் கோரப்பட்ட ஒட்டுமொத்த கட்டணத் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டதாகக் கூறப்படும் உறுப்பினர்கள் மூவரின் 'கூட்டம்' செல்லுபடியற்ற நிலையில் காணப்படுவதோடு, ஆணைக்குழுவின் கூட்டமொன்றாகவும் அமையவில்லை என்பதனாலும்;

பயன்படுத்தப்படுகின்ற மின் அலகுகளின் அடிப்படையில் நிலையான கட்டணமொன்றும், மொத்தக் கட்டணத்தின் மீது விசேட சேவை வரியொன்றும் என்ற வகையில் இலங்கை மின்சார சபையினால் தற்போது பெருமளவில் உயர்த்தப்பட்ட கட்டணங்கள் அறவிடப்படுவதோடு அது உண்மையாகவே பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவின்மீது மேற்கொள்ளப்படும் மூன்று மடங்குகளிலான அறவீடு என்பதால் அதன் மூலம் 1138% கட்டண அதிகரிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ள மாதாந்தம் 35 அலகுகளைவிட குறைந்தளவு மின்சாரத்தைப் பயன்படுத்தும் மிகவும் வறுமை நிலையிலுள்ள 1.5 மில்லியன் பாவனையாளர்கள் இலக்காகக் கொள்ளப்பட்டு அவர்களின் மீது பாரிய அழுத்தம் பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஏழைகளை இருளில் மூழ்கடிக்கும் நடவடிக்கையாக அதனை கருத முடியுமென்பதனாலும்;

பாராளுமன்றத்திற்கு பகிரங்க நிதிகளின் மீது பூரண கட்டுப்பாட்டு அதிகாரத்தை வழங்கும் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரை மற்றும் ஆணைக்குழு இறுதியாக பாராளுமன்றத்திற்குப் பதிலளிக்க வேண்டுமென விதித்துரைக்கப்படுகின்ற 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடியாலும்;

அதற்கிணங்க, அரசியலமைப்பின் 74(1) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தினால்,

(அ) இலங்கை மின்சார சபையினால் தற்போது அறவிடப்படுகின்ற திருத்தக் கட்டணத்திற்கான "அங்கீகாரத்தின்" சட்டத்தன்மை மற்றும் பொருத்தப்பாட்டினை ஆராய்ந்து, ஏதேனுமொரு விதத்தில் அது சட்டபூர்வமற்றதாக மற்றும் / அல்லது பொருத்தமற்றதாக அடையாளங் காணப்படும் பட்சத்தில் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்காகவும்; மற்றும்

(ஆ) ஆணைக்குழு செயலிழந்திருந்தமையினால் 2022 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக மேற்கூறப்பட்ட "அங்கீகாரம்" வழங்கப்பட்டுள்ளதாக அடையாளங் காணப்படும் பட்சத்தில், சர்வதேச நாணய நிதியத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட செலவினத்தை ஈடு செய்வதற்கான வழிகாட்டல்கள் மற்றும் 2008.10.22 ஆம் திகதிய SCFR 113/2008 ஆம் இலக்க உயர்நீதிமன்ற வழக்குத் தீர்ப்பினைக் கருத்திற் கொண்டு "அடிமட்ட" பாவனையாளர்களுக்கும், வீட்டு, சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களின் பாவனையாளர்களுக்கும் நிவாரணம் வழங்கி, கட்டணக் கட்டமைப்பினையும் உள்ளடக்கி பொது நலனுக்காக பாராளுமன்றத்தினால் எடுக்கப்பட வேண்டிய அவசரமான பரிகார நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கும்

பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2\. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் குழு இருபத்தொரு (21) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3\. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கு அது அவசியமென தீர்மானிக்கும் வகையில் அதன் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் பெற்றுக்கொள்வதற்கும்,

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை முன்வைப்பதற்கும், கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4\. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து மூன்று (03) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.

பா. 28/2024

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,— சடுதியாக அதிகரித்து வரும் வீதி விபத்துகள் பற்றிய விடயங்களை ஆராய்ந்து வீதி விபத்துகளை குறைப்பதற்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புகளுக்கும் ஏனைய நடைமுறை செயற்பாடுகளுக்கும் தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,— தற்போது வீதிகளை சார்ந்ததாக இடம்பெறுகின்ற வாகன விபத்துகள் காரணமாக மனித உயிர்கள் அகாலத்தில் இழக்கப்படுவதும், முழுமையான அல்லது பகுதியளவான அங்கவீனத்திற்கு உள்ளாவதும் பரவலாக இடம்பெறுவதனாலும்;

மனித உயிர்கள் இழக்கப்படுதல் மற்றும் அங்கவீனமடைதல் காரணமாக குடும்பத்தில் பொருளாதார மற்றும் இதர சிக்கல்கள் ஏற்படுவதோடு பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மட்டுமன்றி ஏனைய நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவது விசேடமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளதனாலும்;

இன்றைய பொருளாதார நிலைமையில் சுகாதாரத் துறைக்கும் இது பாரிய செலவுச் சுமையாக இருப்பதுடன், வாகன விபத்துகளின் மூலம் சொத்துக்களுக்கும், வாகனங்களுக்கும், வீதிகளுக்கும் ஏற்படுகின்ற சேத இழப்புக்கள் காரணமாக அவற்றை புனரமைப்பதன் பொருட்டு கணிசமான செலவினத்தை ஏற்க நேரிடுவதனாலும்;

பொலீஸ் அறிக்கைகளின் பிரகாரம் 2023.01.01 முதல் 2023.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற மரணத்தை சம்பவிக்கும் 2200 வாகன விபத்துகளின் காரணமாக 2310 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதோடு பெரும்பாலும் பாதசாரிகளையும் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களையும் உள்ளிட்ட உடன் ஏறிச் செல்பவர்கள், சாரதிகள், பயணிகள் மற்றும் வீதியைப் பயன்படுத்தியவர்கள் 2293 பேரும் வீதியைப் பயன்படுத்தாத 17 பேரும் மரணித்துள்ளதனாலும்;

6195 கொடிய வாகன விபத்துகளும், சிறிய காயங்களுடன் கூடிய 9725 வாகன விபத்துகளும் இழப்புகளை ஏற்படுத்திய 6514 வாகன விபத்துகளும் என ஆண்டு முழுவதும் மொத்தமாக 24,634 வாகன விபத்துகள் தொடர்பாக பதிவாகியுள்ளதனாலும்;

இலங்கையில் இவ்வாறு அசாதாரண முறையில் வாகன விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலைமையானது உடனடியாக தடுக்கப்பட வேண்டிய தேசிய கடமையாக கருதப்பட வேண்டியுள்ளதனாலும்; மற்றும்

அதற்கு சாரதிகளின் கவனயீனம், பாதுகாப்பற்ற வாகன ஓட்டம் மற்றும் சட்ட கட்டமைப்பில் காணப்படுகின்ற பலவீனங்கள் ஏதுவாக உள்ளனாலும்;

(அ) வீதி விபத்துகள் இடம்பெறுவதற்கு ஏதுவான விடயங்களை அடையாளங் காண்பதற்கும்;

(ஆ) வீதி விபத்துகளைக் குறைப்பதற்கு தேவையான சட்ட கட்டமைப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளை அடையாளங்கண்டு அவற்றை இற்றைப்படுத்தும் பொருட்டு தேவையான மறுசீரமைப்புகள் யாவையென்பதை அடையாளங் காண்பதற்கும்; மற்றும்

(இ) அவ்வாறு வீதி விபத்துகள் அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ள இடைநேர் விளைவான விடயங்கள் யாவையென்பதை அடையாளங் காண்பதற்கும்

சடுதியாக அதிகரித்து வரும் வீதி விபத்துகள் பற்றிய விடயங்களை ஆராய்ந்து வீதி விபத்துகளை குறைப்பதற்குத் தேவையான சட்ட மறுசீரமைப்புகளுக்கும் ஏனைய நடைமுறை செயற்பாடுகளுக்கும் தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

   (ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், குழுவானது பதினொரு (11) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

   (அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

   (ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

   (இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

   (ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்

   தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து நான்கு (04) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

3.

பா. 29/2024

கௌரவ சட்டத்தரணி (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி,— விவசாய பயிர்ச் செய்கைகளுக்கு வன விலங்குகளினால் ஏற்படும் சேதங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் அச்சேதங்களைத் தடுப்பதற்கும் பொருத்தமான முன்மொழிவுகளையும், விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு,— இலங்கையின் கிராமியப் பொருளாதாரத்திற்கு மட்டுமன்றி தேசியப் பொருளாதாரத்திற்கும் உந்து சக்தியாக விளங்கும் விவசாய பயிர்ச் செய்கைகளுக்கு வன விலங்குகளால் ஏற்படும் சேதங்கள் காரணமாக விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளதாலும்;

குறிப்பாக, நாடு முழுவதும் தெங்குச் செய்கையின் விளைச்சல் அரைவாசிக்கும் அதிகமாக வீழ்ச்சியடைவதற்கு வன விலங்குகளினால் ஏற்படும் சேதங்கள் கடுமையான தாக்கத்தை செலுத்தியுள்ளதாலும்;

அத்துடன், ஏனைய பல்வேறுபட்ட பயிர்ச் செய்கைகளுக்கும் வன விலங்குகளினால் ஏற்படும் சேதங்கள் காரணமாக விவசாயிகள் தமது வருமானத்தை இழக்க நேரிட்டுள்ளதால், அவர்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை கைவிட்டுவிடுவதற்கே தூண்டப்பட்டுள்ளதாலும்;

இதற்கான தீர்வுகளைக் கண்டறிய வேண்டிய அரச நிறுவனங்கள் அதன்பொருட்டு போதிய கவனஞ் செலுத்தியுள்ளதாக காணப்படவில்லை என்பதாலும்; மற்றும்

வெளிநாடுகளில் இது போன்ற சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்தேனும் இலங்கைக்கு உகந்தவாறு அம்முறைகளைப் பின்பற்றி, வன விலங்குகளின் இருப்பைப் போன்று விவசாயிகளினது இருப்பையும் உறுதிப்படுத்தி, மிகப் பயனுள்ள வகையில் பயிர்ச் செய்கைகளை பாதுகாப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் என்பதாலும்;

விவசாய பயிர்ச் செய்கைகளுக்கு வன விலங்குகளினால் ஏற்படும் சேதங்கள் தொடர்பில் ஆராய்வதற்கும் அச்சேதங்களைத் தடுப்பதற்கும் பொருத்தமான முன்மொழிவு களையும், விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளின் பிரகாரம், குழுவானது பன்னிரெண்டு (12) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து நான்கு (04) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.